# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ARCOT.

CC.**NO.32 /2009**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சசிகுமார் | தாலுக்கா | : | வேலூர் |
| த/பெ | : | ரெங்கநாதன் | தொழில் | : | ஆய்வாளர் |
| கிராமம் | : | வேலூர் | வயது | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date: **28.05.2024.**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆற்காடு நகர காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். சி.சிஎண் 32/2009 ல் குற்றவாளி செல்லசாமி த.பெ.ராமகிருஷ்ணன் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகமால் தலைமறைவாக இருந்து வந்ததால் அவருக்கு எதிராக கு.வி.மு.ச பிரிவு 82 ன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டி என்னால் இந்த மாண்புமிகு நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டு அந்த மனுவின் பெயரில் இவ்மாண்புமிகு நீதிமன்றம் டிஸ் எண்.376/2024 நாள் 16.02.2024 அன்று இவ்வழக்கின் எதிரியாக குமார் த.பெ கமலநாதன் என்பவர் 28.03.2024 அன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென உத்தரவு பிறப்பித்தது. அவ்வாறு எதிரி ஆஜராக வில்லை என்றால் எதிரி 28.03.2024 அன்று அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக அறிவிக்கப்படுவார் என உத்தரவு பிறப்பித்தது. மேலும் அந்த உத்தரவினை உரிய வகையில் நிறைவேற்றுவதற்கு எனக்கு அறிவு றுத்தல்களையும், வழிகாட்டுதல்களையும் வழங்கியது. நான் அந்த உத்தரவில் குறிப்பிட்டது போல் நீதிமன்ற ஆணையை உரிய வகையில் நிறைவேற்றி விட்டேன். மேலும் அதற்காக ஆவணங்களையும் நான் சமர்பித்து விட்டேன் என உறுதி கூறுகிறேன்.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

District Munsif cum Judicial Magistrate,
Arcot.

No.of corrections:



This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNRP0A0000552009-orderno-1.pdf

www.ecourtsindia.com